[4th March 1968

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: தலைவர் அவர்களே, இழப்புத் தொகைக்கு விண்ணப்பம் செய்வதற்கு மாணவர்கள் முதல் அல்லது இரண்டாவது தடவை வாங்கிய கட்டணத்தை திருப்பிக் கொடுத்தவுடன் தான் விண்ணப்பம் செய்ய வேண்டுமென்று விதி வகுக்கப்பட்டிருக்கிறது. புதிய கல்லூரிகளில் பொருளாதார நெருக்கடி இருப்பதால், முதல் இழப்புத் தொகையை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்ற உத்தரவின் பேரில் முதல் இழப்புக் கட்டணம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே! ஒரு ஆண்டு முடிந்ததற்குப் பிறகு ஒரு ஆண்டுக்குக் கொடுக்கலாம் என்றிருக்கிறது. இப்படிப்பட்ட நெருக்கடி இருப்பதால், மூன்று தவணையாகக் கொடுக்கலாம் என்ற முடிவு இருக்கிறது. அப்படிச் செய்தால் அதிகமான சிரமம் இருக்காது என்று கருதப்படுகிறது. அப்படி ஏதாவது சிரமம் இருந்தால், தக்கபடி ஆலோசித்து முடிவு எடுத்துக் கொள்ள முடியும்.

Production of bricks.

*162 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the number of brick kilns run for the manufacture of bricks through the co-operative sector and through the public sector in Madras State;

(b) the monthly out-turn of these factories;

(c) the value thereof; and

(d) the amount of profit or loss according to the latest information available?

செங்கல் உற்பத்தி

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) தமிழகத்தில் செங்கல் உற்பத்திக்காக கூட்டுறவு மூலமும், சர்க்கார் மூலமும் இயங்கும் செங்கல் (brick kiln) தொழிற்சாலைகள் எத்தனை இருக்கின்றன?

(இ) அவைகளின் மாத உற்பத்தி திறன் என்ன?

(உ) அவற்றிற்கு உண்டான மதிப்பு எவ்வளவு?

(எ) லாபம் அல்லது நஷ்டம் கடைசியாகக் கிடைத்த தகவல்படி எவ்வளவு?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்: (அ) அரசு மூலம் இயங்குபவை—2.

கூட்டுறவு மூலம் இயங்குபவை—

தொழில் வணிகத்துறை மேற்பார்வையில்—8

சென்னை ராஜ்ய கதர் கிராமத் தொழில் போர்டு மேற்பார்வையில்—67.

(இ) மாதம் ஒரு லட்சம் முதல் 16½ லட்சம் செங்கற்கள்.

(உ) மாதம் ரூ. 3,500 முதல் ரூ. 32,390 வரை.

4th March 1968]

(திருமழிசை செங்கற் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் செங்கற்களின் விலை இதில் அடங்கவில்லை. ஏனெனில் இத்தொழிற்சாலை இவ்வருடம் மார்ச்சு மாத முடிவில்தான் முறையான உற்பத்தியைத் துவக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது)

(எ) லாபம் : (1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரை 14 தொழிற்சாலைகள் அடைந்த லாபம்) ரூ. 1,053·64 முதல் ரூ. 77,499 வரை.

நஷ்டம் : (62 தொழிற்சாலைகள் அடைந்த நஷ்டம்)—ரூ. 4,005 முதல் ரூ. 9,832 வரை.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, இந்த செங்கல் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கும் போது அந்த இடம் செங்கல் உற்பத்திக்குப் பொருத்தமான மண் உள்ள இடமா என்று பார்த்த பிறகு கொடுக்கப்படுகிறதா ? அப்படி மண் அமைப்பைப் பார்க்காமல் கொடுத்ததால், செங்கல் சரியானபடி உற்பத்தி செய்யமுடியாமல் பல இடங்களில் அந்தத் தொழிற்சாலைகள் மூடுவிழா நடத்தப்பட்டது தெரியுமா ? இனிமேலாவது அப்படி நடக்காமல் சரியான மண் அமைப்பு இருக்கிறதா என்று பார்த்த பிறகு அனுமதி கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : செங்கல் தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கும் போது உறுப்பினர் எடுத்துச் சொல்வதைப் போல மண் அமைப்பு போன்றவைகளைக் கணக்கில் கொண்டுதான் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவை எந்த அடிப்படையில் கொடுக்கப்பட்டன என்று விவரம் தெரியவில்லை. என்ன காரணம் என்பதை தனித்தனியாக ஆராய்ந்து பார்த்தால் தெரியும். இப்போது ஏற்பட்ட அனுபவத்தை வைத்துக் கொண்டு பார்க்கும்போது, இனிமேல் லாபகரமாக எல்லோருக்கும் பயன்தரும் வகையில் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : சென்னையில் சர்க்கார் சார்பாக ஆரம்பித்திருக்கும் தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் எவ்வளவாக இருக்கிறது ? சர்க்கார் சார்பிலுள்ள அந்தத் தொழிற்சாலை காரணமாக செங்கல் தேவை நகரத்தில் குறைந்திருக்கிறதா ? அல்லது அதிகமாகியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போதுதான் திருமழிசையில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ந் தேதி அதனுடைய வெள்ளோட்டம் காணப்பட்டது. இனிமேல்தான் முறையான உற்பத்தி மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படும். அதற்குப் பிறகு எந்தவகையில் வேலை செய்கிறது என்றும் அதனால் எப்படிப்பட்ட நிலை ஏற்படுமென்று அறிய முடியும்.

திரு. சி. பி. சிற்றரசு : அந்த செங்கல் சூளைகளுக்கு அனுமதி எப்போது தரப்பட்டது?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதைப்பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால், தெரிந்து சொல்ல முடியும்.

திரு. எம். எத்திராஜுலு : தமிழகத்தில் செங்கல் தொழிற்சாலைகள் எங்கெங்கு இயங்குகின்றன ? செங்கல் சூளை தொழிற்சாலைகளுக்கு வெளி நாடுகளிலிருந்து ஏதாவது இயந்திரங்கள் வரவழைக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படி வரவழைக்கப்பட்டவை யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : திருமழிசையில் இருப்பது செக்கோஸ்லோவாகியா நாட்டோடு தொடர்புகொண்டு அதன் ஒத்துழைப்புடன் நடைபெறுகிறது. மற்றும் எந்தத் தொழிற்சாலைகள் எந்த நாட்டினோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்ற விவரம் இல்லை. தொழில் வணிகத் துறையில் 8 தொழிற்சாலைகள் இருக்கின்றன.

செங்கற்பட்டு தாலுகா, குன்றத்தூர், லால்குடி, சிதம்பரம் தாலுகா ஸ்ரீவைகுண்டம், மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், மாயூரம் ஆகிய இடங்களில் உள்ளன. கதர் போர்டு கீழ் உள்ள தொழிற்சாலை விவரங்கள் தனிக் கேள்வி போட்டால் தெரியும்.

Deputy Inspectors and District Educational Officers

***163. *Q*—THIRU G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—**

(*a*) the number of Assistant Professors of Government Training Colleges posted as Deputy Inspectors in 1966 ; and

(*b*) the number of such Deputy Inspectors promoted as District Educational Officers ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) 5.

(இ) இல்லை.

THIRU G. KRISHNAMOORTHY : **Sir, may I know the reason for not giving them the District Educational Officers' posts in spite of the training for one year ?**

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே ஐந்து பேர் டெபுடி இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டு பயிற்சி பெறும் நிலைமையில் இருக்கிறார்கள். டி.இ.ஓ. ப்ரமோஷன் 1967-ம் ஆண்டில் நியமிக்கப்பட்டவர்களுக்கு வராததால் அவர்களுக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. மேலும் அவர்களில் இரண்டுபேர் உதவி பேராசிரியர்களாகவே திரும்பவும் கல்லூரிக்கு வந்துவிட்டார்கள். மூன்று பேர் பயிற்சி பெறும் நிலைமையில் இருக்கிறார்கள். 1966 ஏப்ரல் 1-ந்தேதிக்கு முன்னால் அவர்களுக்கு ரூ. 225-10-275-15-350 என்ற அளவுக்கு சம்பள விகிதம் இருந்தது. யு.ஜி.சி. ஸ்கேலுக்குப் பிறகு ரூ. 300-25-600 என்று ஆயிற்று. இப்போது பேராசிரியர்களுக்கு ரூ. 400-30-640-40-800 வரையில் போவதால், மற்ற டி.இ.ஓ. வுக்கு 300-25-800 இருப்பதால், பெரும்பாலோர் பேராசிரியர்களாக வருவதை மேலானதாகக் கருதுகிறார்கள். பயிற்சி பெறும் நிலையில்தான் மற்ற மூன்று பேரும் இருக்கிறார்கள்.

THIRU G. KRISHNAMOORTHY : **Sir, would Government reserve the future vacancies for them if they apply for such posts ?**

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : மறுபடியும் பயிற்சி பெற்று அந்த டி.இ.ஓ. வாக வருவதற்கு விரும்பினால் அதற்கான காலி இடம் ஏற்பட்டால் கவனிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : ஐந்து சாதாரண பேராசிரியர்கள் ரூ. 300 ஆரம்ப சம்பளத்திலிருந்து துணை ஆய்வாளராக ரூ. 140-250 என்ற சம்பளத்திற்கு இறக்கப்பட்டதற்குக் காரணம் என்ன ? அதனால் பி.எ.பி.டி. படித்துள்ள துணை ஆய்வாளர்கள் சம்பளத்தில் பாதிக்கப் பட்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அவர்கள் இருந்த பதவியிலிருந்து இறக்கப்பட்டதாகக் குறிப்புகள் இல்லை. உதவிப் பேராசிரியராக இருந்து பயிற்சி பெறுவதற்குச் சென்றார்கள் என்றும் இரண்டு பேர்கள் கல்லூரிக்கு வந்துவிட்டார்கள் என்றும் மற்ற மூன்று பேரும் பயிற்சி பெறும் நிலையில் இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. டி.இ.ஓ. வாக நியமிப்பதற்கு ஏற்ற வாய்ப்பு இடம் காலியாக இல்லாததால் அவர்கள் அதிலேயே இருக்கிறார்கள். இப்போது உதவி பேராசிரியரிலிருந்து பேரா :